# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# TAMIL VIRTUAL ACADEMY

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG10 - நிலை I - (Grade 1)**

நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)

நவம்பர், திசம்பர் - 2016

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 75

## பகுதி - அ

**I** **எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. அருள் மணம் வீசுபவர் யார்?
2. துன்பம் வரும் போது சிறந்த நட்பு என்ன செய்யும்?
3. இளவேனில் காலத்தில் வீசும் காற்றின் பெயர் என்ன?
4. பாரதியார் எப்படிப்பட்ட நெஞ்சு வேண்டும் என்கிறார்?
5. தமிழ் எத்தனை ஆண்டுகள் பழமை உடையது?
6. 'நஞ்சு' தேர்வில் எழுதிய உணவுப் பொருட்கள் எவை?
7. காஞ்சிபுரத்தில் உள்ள அம்மன் கோவில் எது?
8. உருத்திரங்கண்ணனார் எந்த ஊரைச் சேர்ந்தவர்?
9. உயிர்மெய் எழுத்து என்றால் என்ன?
10. இலக்கணத்தில் இடம் எத்தனை வகைப்படும்?

## பகுதி - ஆ

**II** **எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. நாமக்கல் கவிஞர் எவற்றை வாழ்த்துகிறார்?
2. பேதையார் நட்பு எதைப் போன்றது?
3. எவையெல்லாம் அழகல்ல என்று நாலடியார் கூறுகின்றது?
4. திருநாவுக்கரசர், ஏன் சைவ சமயத்திற்கு மாறினார்?
5. குழந்தைகள் தமிழ்த் தாய்க்கு தரும் பால்கள் எவை?
6. உலக மொழிகளில் செம்மொழிகள் எவை?
7. எதனால் மருத்துவர் நல்ல மருத்துவராகக் கருதப்பட்டார்?
8. வாழைப் பூவிற்கும் பிற பூக்களுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?
9. நோபல் பரிசு பெற்ற தமிழர் யார்? எதற்காக அப்பரிசு வழங்கப்பட்டது?
10. பட்டினப்பாலையை எழுதிய புலவருக்கு மன்னன் வழங்கிய பரிசுகள் எவை?
11. முதல் எழுத்துகள் எவை?
12. காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

13. உருபுகள் இல்லாத வேற்றுமைகள் எவை?
14. பெயரெச்சம் என்றால் என்ன?
15. புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

## பகுதி - இ

**III** **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. தமிழ் மொழியின் சிறப்புகளாக முடியரசன் கூறுவன யாவை?
2. அல்லாவின் சிறப்புகளாக உமறுப்புலவர் எடுத்துரைப்பன எவை?
3. அபிராமி பற்றி அபிராமி அந்தாதி கூறுவன யாவை?
4. பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றம் பெறுவதாக அப்பா கூறினார்?
5. காஞ்சி வரதராசப் பெருமாள் கோவில் பற்றி எழுதுக.
6. சர்.சி.வி. இராமனின் பிறப்பு, கல்வி பற்றி எழுதுக.
7. சார்பெழுத்துகளை எழுதுக.
8. 'யாப்பு' என்றால் என்ன? அதன் உறுப்புகள் யாவை?

## பகுதி - ஈ

**IV** **ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. தமிழ்த்தாயைக் குழந்தைகள் எவ்வாறெல்லாம் வளர்க்கிறார்கள்? விளக்குக.
2. பதினாறுகால் மண்டபம் பற்றிய செய்திகளை விளக்குக.
3. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - உ

**V** **ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
**Write an essay in three pages to any one of the questions.** **(1x15=15)**

1. வீட்டுக்கு வந்த விருந்தினர்களை குடும்பத் தலைவி எவ்வாறு வரவேற்றாள் என்பதனைக் கட்டுரை வடிவில் எழுதுக.
2. தமிழ் உயர்தனிச் செம்மொழியாக பெருமை பெற்றதற்கான காரணங்களைத் தொகுத்து எழுதுக.